Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



பதிவு அஞ்சல் மூலம்

நகர் ஊரமைப்புத் துறை

அனுப்புநர்
டாக்டர் திருமதி பீலா ராஜேஷ் இ.ஆப
நகர் ஊரமைப்பு ஆணையர்,
807, அண்ணாசாலை,
சென்னை - 2.
www.tn.gov.in/dtcp
Email Id: dtcp@vsnl.net

பெறுநர்
மண்டல துணை இயக்குநர் (பொ),
வேலூர் மண்டலம்,
வேலூர்.

ந.க.எண்.7170/2017/எல்ஏ1, நாள் .28.05.2018

அய்யா,

பொருள்: மனைப்பிரிவு - நகர் ஊரமைப்பு ஆணையர் அலுவலகம், சென்னை-2 - வேலூர் மண்டலம், வேலூர் மாவட்டம் - அணைக்கட்டு வட்டம் - வேலூர் ஊராட்சி ஒன்றியம் - தெள்ளூர் ஊரட்சி மற்றும் கிராமம் நில அளவு எண்கள் .144/3, 145/1, 146, 153/6, 154 மற்றும் 155/4 மற்றும் செம்பேடு ஊராட்சி மற்றும் கிராமம் நில அளவு எண்கள் .35/7, 32/2B மற்றும் 34/1A2-ல் 9.63ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப அனுமதி வரைபடம் - ஒப்புதல் வழங்குதல் - குறித்து.

பார்வை:
1. மனுதாரர் K.ஜவுரிலால் விண்ணப்பங்கள் 03.04.2017 மற்றும் 24.05.2018.
2. தனி அலுவலர் தெள்ளூர் ஊராட்சி கடித ந.க.எண்.அ/4/187/2017 நாள் .28.03.2017 மற்றும் பல மற்றும் தனி அலுவலர் செம்பேடு ஊராட்சி கடித ந.க.எண்.அ/4/187/17 நாள் .28.03.2017 மற்றும் பல.
3. மண்டல துணை இயக்குநர் வேலூர் மண்டலம் கடிதம் ந.க.எண்.364/2017 வேம3 நாள் .18.04.2013
4. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள் .20.07.2017.
5. இவ்வலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.14619/88பிசிசி, நாள் .27.04.1988
6. இவ்வலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.40483/90 எல்ஏ1, நாள் .07.11.1992
7. மாவட்ட ஆட்சித் தலைவர், வேலூர் மாவட்டம் அவர்களின் கடித ந.க.எண்.பி2/20124/14 நாள் .05.12.2016
8. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.7978/2012 எல்ஏ2 நாள் .19.04.2012
9. அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் .04.05.2017.
10. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.13686/2017/எல்ஏ1, நாள் .08.09.2017.
11. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12201/2017/Spl.cell நாள் .28.09.2017.

பார்வை 1-ல் சுட்டிய கடிதத்துடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரத்திற்கான கோரிக்கை, பரிசீலிக்கப்பட்டு, பார்வை 4-ல் சுட்டிய இவ்வலுவலக கடிதம் மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டு, சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகள் உள்ளாட்சியிடம் தானமாக ஒப்படைக்கப்பட்டதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2) மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ/ந.ஊ.இ எண்.18/2018** என எண்ணிடப்பட்டு 6 அசல் வரைபடங்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

3) மேலும், பார்வை 5 மற்றும் 6 ஆகியவற்றில் சுட்டியுள்ள இவ்வலுவலக சுற்றறிக்கைகளில் தெரிவித்துள்ளபடி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4) பார்வை 8-ல் சுட்டிய இவ்வலுவலக சுற்றறிக்கையின்படி பொது திறவிடங்கள் மற்றும் சாலைகள் தானப் பத்திரம் மூலம் பதிவு செய்து உள்ளாட்சியிடம் ஒப்படைத்துள்ளதன்படி மனைப்பிரிவு உரிமம் உள்ளாட்சியால் வழங்கப்பட வேண்டும்.

5) மனைப்பிரிவு நிபந்தனை எண்.16-ன்படி திறவிடம் மற்றும் பூங்காவிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள திறந்தவெளி ஒதுக்கீடுகளையும் மற்றும் சாலைகளுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தையும் தானபத்திரம் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளதன்படி தனி அலுவலர், தெள்ளூர் ஊராட்சி மற்றும் தனி அலுவலர் செம்பேடு ஊராட்சி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் எனவும், மனைப்பிரிவு நிபந்தனை 16(இ), 16(உ) குறித்து உறுதி செய்த பின்னரே ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என்பு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

6)மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.16(ஈ)-ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

7) உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

8) செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகைச் சான்றினை உடன் அனுப்பிவைக்குமாறும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

சிறப்பு நிபந்தனை

1. மனைப்பிரிவில் தார்சாலைகளாக அமைத்தும், சாலைகளுக்கான இடம், பூங்கா, திறவிடம், சிறுவர் பூங்கா ஆகியவற்றை உள்ளாட்சி தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டதின் பேரில் இம்மனைப்பிரிவுக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கி அனுப்பப்படுகிறது. இதன் பின்னர் மனைப்பிரிவில் தேவையான பாலங்கள் சாக்கடை, வடிகால் துப்புரவு வசதி, தெருவிளக்கு ஆகியவசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதையும், தார் சாலைகளாக அமைக்கப்பட்டுள்ளதையும் இடநேராய்வின் மூலம் உறுதி செய்த பின்னரே மண்டல அலுவலகத்தால் இம்மனைபிரிவுக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதை உள்ளாட்சிக்குத் தெரிவித்து வரைபடங்களை அனுப்பி வைக்க வேண்டும்.
2. பார்வை 9-ல் கண்டுள்ள அரசாணையில் குறிப்பிட்டுள்ள விதி எண்.3-ன் படி கூராய்வு கட்டணமாக ரூ.1000/-யும் மற்றும் விதி எண்.9-ன்படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நில பயன் மாற்றக் கட்டணமாகவும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் வசூல் செய்த பிறகே உள்ளாட்சியில் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

3. பார்வை 10-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் துறையில் ச.எண்கள் உட்பிரிவுகள் செய்து அதற்கான விபரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
4. பார்வை 11-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, H & UD Department dated 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise market, book sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be in any Real Estate Project or part of it only after Registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority-ன் படி நடவடிக்கை தொடருமாறு தெரிவிக்கப்படுகிறது.
5. செம்பேடு கிராமத்தில் அமையும் புஞ்சை நிலப்பகுதி வேளாண்மை துறையின் கருத்துரு பெற்று இறுதி ஒப்புதல் உள்ளாட்சியால் வழங்கப்பட வேண்டும்.

இணைப்பு:
வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்
(6 நகல்கள்)

(ஒம்)/- பீலா ராஜேஷ்,
நகர் ஊரமைப்பு ஆணையர்.

நகல்

1. தனி அலுவலர்/
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
செம்பேடு ஊராட்சி
2. தனி அலுவலர்
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
தெள்ளூர் ஊராட்சி

(கடிதம் மட்டும்) பதிவு அஞ்சல்

3. திரு.K.ஜவுரிலால்,
த/பெ.(லேட்)A.கேவல்சந்த் ஜெயின்
89 சந்தைப்பேட்டை
குடியாத்தம் டவுன்,
வேலூர் மாவட்டம்

(கடிதம் மட்டும்) பதிவு அஞ்சல்

4. இருப்பு கோப்பு (வரைபடம்-1 மற்றும் நிபந்தனைகள் படிவம்-1)
5. கோப்பு (வரைபடம்-1 மற்றும் நிபந்தனைகள் படிவம்-1)

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

30/5/18

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்

30.5.18

விடுநர்:

திரு ஆ தண்டாயுதபாணி, B.Sc.,
தனி அலுவலர் செம்பேடு ஊராட்சி மற்றும்
தெள்ளூர் ஊராட்சி /
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
அண்ணா சாலை, வேலூர் - 632 001.

பெறுநர்:

1எண் இணை சார்பதிவாளர்,
(மாவட்டப்பதிவாளர் நிலை),
அசல் பத்திரப்பிரிவு,
வேலூர் 632 001.

ந.க.அ5/101/2019, நாள்: 19.09.2019.

ஐயா,

பொருள்: மனைப்பிரிவு அனுமதி - வேலூர் ஊராட்சி ஒன்றியம் - செம்பேடு மற்றும் தெள்ளூர் ஊராட்சி - தெள்ளூர் ஊராட்சி தெள்ளூர் கிராமம் சர்வே எண்.144/3, 145/1, 146, 153/6, 154, 155/4-ல் மொத்த பரப்பு 8.31 ஏக்கர் மற்றும் செம்பேடு ஊராட்சி செம்பேடு கிராமம் சர்வே எண்.32/2B, 34/1A2, 35/7-ல் 1.32 ஏக்கர் ஆக மொத்தம் 9.63 ஏக்கர் நிலத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப இசைவு அமைத்தல் தொடர்ந்து - விவசாயம் அல்லாத மற்ற பயன்பாட்டிற்கான 3% Conversion தொகை செலுத்தியதின் பேரிலும், மேற்படி மனைபிரிவிற்கு செம்பேடு மற்றும் தெள்ளூர் ஊராட்சி மன்ற தீர்மானங்கள் இயற்ற பட்டுள்ளதாலும் - செம்பேடு ஊராட்சிக்கு பூங்காவிற்கென ஒதுக்க வேண்டிய 13428.95 ச.அடியும், தெள்ளூர் ஊராட்சி பூங்காவிற்கென ஒதுக்க வேண்டிய 29,036 ச.அடியும் ஒதுக்கப்பட்டு உள்ளதாலும் - மேற்படி மனைபிரிவு வரைப்பட அங்கீகாரம் அனுமதி வழங்கியது - சார்பு.

பார்வை:
1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் (பொறுப்பு) வேலூர் மண்டலம், அவர்களின் கடிதம் எண். ந.க.எண்.364/2016/ வேம3, நாள்: 07.01.2019.
2. இணை சார் பதிவாளர் அலுவலக பத்திரம் ஆவண எண்.8754/2017.
3. கே.ஜவுரிலால் ஜெயின், எண்.89,சந்தபேட்டை பஜார், குடியாத்தம் டவுன் என்பவரது விண்ணப்பம் நாள்: 05.07.2019 மற்றும் Conversion Charges ரூ.79,455/-செலுத்திய அசல் சலான், நாள்: 02.08.2019.
4. செம்பேடு ஊராட்சி தீர்மானம் எண்: 9, நாள்: 19.08.2019.
5. தெள்ளூர் ஊராட்சி தீர்மானம் எண்: 87, நாள்: 28.08.2019.

<><><><>

பார்வை 1-ல் கண்ட வேலூர் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொறுப்பு) அவர்களின் நடவடிக்கையின்படி வேலூர் ஊராட்சி ஒன்றியம், **தெள்ளூர் ஊராட்சி மற்றும் செம்பேடு ஊராட்சிகளில், தெள்ளூர் ஊராட்சி, தெள்ளூர் கிராமம் சர்வே எண்கள்: 144/3, 145/1, 146, 153/6, 154, 155/4-ல் மொத்த பரப்பு 8.31 ஏக்கர் மற்றும் செம்பேடு ஊராட்சி செம்பேடு கிராமம் சர்வே எண்.32/2B, 34/1A2, 35/7-ல் 1.32 ஏக்கர் ஆக மொத்தம் 9.63 ஏக்கர் நிலத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.**

அரசு அங்கீகார D.T.C.P. அனுமதி எண் ம.வ./ந.ஊ.இ.எண்: 18/2018-ல் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து தெள்ளூர் மற்றும் செம்பேடு ஊராட்சிகளில் உள்ள சர்வே எண்களில் அமைக்கப்பட்ட மனைப்பிரிவில் உள்ள 147 மனைகள் விற்பனை செய்வதற்கு ஏதுவாக அரசுக்கு செலுத்த வேண்டிய விவசாயம் அல்லாத மற்ற பயன்பாட்டிற்கான 3% Conversion Charges தொகை ரூ.79,455/-ஐ உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட்டு சலான் அசலாக பார்வை 3-ல் காணும் கடிதத்துடன் இணைத்து இவ்வலுவலகத்தில் சமர்ப்பித்ததின் அடிப்படையிலும், மேலும் தெள்ளூர், செம்பேடு ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட பொது இடம் தானபத்திரம் மூலமாக பதிவு எண் 8754/2017 மூலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து ஊராட்சிகளுக்கு ஒப்படைக்கப்பட்டதின் அடிப்படையிலும் கீழ்காணும் விபரப்படி தெள்ளூர் மற்றும் செம்பேடு ஊராட்சிகளில் உள்ள சர்வே எண்களில் உள்ள 1 முதல் 147 வரையிலான மனைகளை விற்பனை செய்ய பார்வை 4 மற்றும் 5-ல் காணும் செம்பேடு ஊராட்சி மன்ற தீர்மானம் எண்.9, நாள்: 19.08.2019 மற்றும் தெள்ளூர் ஊராட்சி மன்ற தீர்மானம் எண்.87, நாள்: 28.08.2019 மூலமாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாலும், உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவின் வரைபடம் இதன் மூலம் அங்கீகரித்து இத்துடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

..2..

வ.எண்	ஊராட்சியின் பெயர்	சர்வே எண்கள் / அமைந்துள்ள மனைகள்	பூங்காவிற்காக ஒதுக்கப்பட்டுள்ள சர்வே எண்/சதுர அடி
1.	தெள்ளூர் ஊராட்சி	144/3,145/1,146,153/6,154,154/4 8.31 ஏக்கரில் - 134 மனைகள்	1.153/6,154 - 9286.96 ச.அடி 2.153/6,155/4 19750 ச.அடி 1.35/7 - 13428.95 ச.அடி
2.	செம்பேடு ஊராட்சி	32/2B, 34/1A2, 35/7 ல் 1.32 ஏக்கரில் = 13 மனைகள்	

இணைப்பு: அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் 1.

தனி அலுவலர்
செம்பேடு, தெள்ளூர் ஊராட்சி மற்றும்
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), வேலூர்.


நகல்:

திரு மு. ஜவுரிலால் ஜெயின்,
த/பெ லேட் A. கேவல்சந்த் ஜெயின்,
எண்.89, சந்தப்பேட்டை, குடியாத்தம் டவுன்,
வேலூர் மாவட்டம்.

நகல்:

1. நகர் ஊரமைப்பு ஆணையர், எண்.807, அண்ணா [illegible], சென்னை அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் மண்டலம், முன்னாள் படைவீரர் மையம், 2-வது தளம், பெரியார் பூங்கா எதிரில் ,வேலூர் - 632 001. அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நகல் பணிவு: உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), வேலூர்-9.



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals


Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate